திராவிடன்

வாரவெளியீடு ஆசிரியர் என். வி. நடராசன்

1940-ம் ஆண்டு திருவாரூரில் நடைபெற்ற 15-வது மாநில மாநாட்டில், மாநில நிர்வாகக் குழுத் தேர்தல் நடைபெற்றது. அன்று கட்சிக்காக அயராது பாடு பட்டவர்களாயிருப்பினும் அவர்கள் ஏழை—நடுத்தர மக்களாயிருந்தால் நிர்வாகக் குழுவில் இடம்பெறுவது, தங்களின் அந்தஸ்திற்கு இழுக்காகும் என்ற எண்ணம். அன்று கட்கியிலிருந்த 'கனவான்' களுக்குஇருந்துவந்தது அந்த எண்ணத்தை மாற்றி கட்சியினை ஏழை—நடுத்தர மக்களின், உண்மைத் தொண்டர்களின்

அண்ணாவுடன் நான்



திருவாரூரில் நீதிக்கட்சி மாநில மாநாடு

மகத்தான சக்தியாக இயங்கச் செய்யவேண்டும் என்ற விரிவான எண்ணத்தைக் கொண்டிருந்தார் அண்ணா. எனவே திருவாரூர் மாநில மாநாட்டில், நடைபெற்ற மத்திய நிர்வாகக் குழுவிற்கு என்னைப்போன்ற தோழர்களையும் போட்டியிடுமாறு அண்ணா அவர்கள் பணித்தார்கள்.

இச்செய்தி அதுவரை கட்சியின் நிர்வாகக்குழு உறுப்பினர் ஆயத்தம் செய்யப்பட்டது. வோட்டுகளைச் சேகரிக்க தீவிர முயற்சிகள் இருசார்பிலும் மேற்கொள்ளப்பட்டன. கட்சியின் முக்கிய அமைப்பில் உண்மை உழைப்பாளர்கள் சிலராவது இடம் பெறவேண்டும் என்று சில தலைவர்கள் வெளிப்படையாகவே கூறினர். ஆதலால் 'கனவான்'களின் போட்டி வேகம் சற்று குறைந்தது. வோட்டுக்கு விடப்பட்டால் தங்களில் சிலருக்கள் ஆரம்பத்தில் கூறியபோது அதைப் பொருட்படுத்தாத அந்த 'கனவான்'கள் சில மணி நேரத்திற்குள்ளாக அண்ணாவின் யோசனையை ஏற்றனர். அதற்கேற்ப நானும், தோழர்கள் எஸ். நடேசன், ஏன். சீவரத்தினம் உள்ளிட்ட ஐந்து பேரும், நீதிக்கட்சியின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றோம். அதுபோலவே இது வரை பிரதிநிதிகளாகயிருந்துவந்த பிரமுகர்களில் ஐந்து பேர் இடம் கொள்ளாதிருந்த கட்சித் தலைவர்கள், தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முனைந்தனர். ஆனால் அதே சமயத்தில் கட்சி போகிற

என். வி. என்.

போக்கைப்பார்த்தால் இனி நாம் இதிலிருப்பது நமது அந்தஸ்திற்குச் சரியல்ல என்று எண்ணி சில பிரமுகர்களும் கட்சியிலிருந்து தாங்களாகவே வெளியேறிவிட்டனர். அன்றிலிருந்து நீதிக்கட்சி

அறிஞர் அண்ணாவின் சகாப்தம்

களாயிருந்த ''கனவான்''களுக்கு எரிச்சலூட்டிற்று! எங்களையெல்லாம் போட்டியிடாதவாறு தடுக்க அவர்கள் பெரியார் அவர்களின் துணையை நாடினர். ஆனால் அண்ணா அவர்களின் திட்டவட்டமான கருத்தை அறிந்த பெரியார் அவர்கள் தாம் ஒன்றும் துணைபுரிய இயலாது என்று அந்த சீமான்களிடம் கூறிவிட்டார். அதுமட்டுமல்லாமல், அண்ணா அவர்களின் யோசனையால் இயக்கத்திற்கு மேலும் வலிவும் பொலிவும் உண்டாகும் என்பதையும் உணர்ந்தார்.

இறுதியாகத் தேர்தல் நடைபெறவேண்டிய கட்டம் வந்தது. இரு சார்பிலும் போட்டிக்குத் தோல்வி ஏற்படக்கூடும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். எனவே அவர்கள் இது வரை கட்சியில் வகித்துவந்த அந்தஸ்தை எண்ணியெண்ணி, போட்டியிலிருந்து விலகிக்கொள்வதே முறையாகும் என்ற முடிவுக்கு வந்தனர்.

இறுதியாக, அந்தக் 'கனவான்' களின் பிரதிநிதி ஒருவர் அண்ணா அவர்களைச் சந்தித்து இரு சார்பிலும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போட்டியில்லாமல் நிர்வாகக்குழுவிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்று கூறினர்.

இதே யோசனையை— வேண்டுகோளை அண்ணா அவர் பெற்றனர்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற மாநில மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய நிர்வாகக்குழுக்களில் ஏழை-நடுத்தர மக்களே அதாவது கட்சியின் தொண்டர்களே பெருமளவில் இடம் பெற்றனர். இவ்வாறு படிப்படியாக சீமான்கள் பிடியிலிருந்த நீதிக்கட்சியை மக்களின் மகத்தான சக்தியாக மாற்றி அமைத்த பெருமை அண்ணா அவர்களுக்கு உரியதாகும் என்று கூறின் மிகையாகாது.

அண்ணா அவர்களின் இச்சீரிய முயற்சியின் காரணமாக கட்சித் தொண்டர்களுடனும் பொதுமக்களுடனும் அதுவரை தொடர்பு யின் புதிய அத்தியாயம் தொடங்கிற்று! அதுதான் அறிஞர் அண்ணாவின் சகாப்தம்.

நான் இப்படிக்கூறுவதால் அதுவரை யிருந்துவந்த கட்சித் தலைவர்கள் மக்களுக்கு நன்மை செய்யவில்லை என்று அர்த்தமாகாது. அன்றைய அரசியல் சட்டப்படி, சில ஆக்கப்பணிகளை புரிந்துதான் உள்ளனர். ஆனாலும் மக்களுடன் தொடர்பு கொள்வது அவர்களுக்கு மிகக் கசப்பாயிருந்துவந்தது.

அந்தத் தவறான எண்ணத்தைப் போக்கடித்து, கட்சியை, மக்களின் சொத்தாக மாற்றிய பெருமை அறிஞர் அண்ணாவுக்கு உரியதாகும். [தொடரும்]

தலையங்கம்

மலர். 17. 5—10—63 மாலை 10

புதிய முதலமைச்சர்!

——•——

"காமராசர் திட்டமோ" காங்கிரஸ் கட்சியின் ஜலதாரைத் திட்டமோ, அதற்குச் சரியான பெயர் என்னவென்பது நமக்கு முக்கியமல்ல. ஆனால் அதன் காரணமாக, கனம். பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சர் ஆக்கப்பட்டு விட்டார் என்பதுதான் திட்டத்திலுள்ள ருசிகரமான பகுதி. புதிதாக முதலமைச்சரான கனம் பக்தவத்சலம் அவர்களைப்பற்றி எதுவும் குறிப்பிடுவதற்கு முன்னால், நமது நல்வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்வது நமக்குற்ற கடமையாகும்.

தமிழகத்து முதலமைச்சர் பதவியின்மேல் கனம். பக்தவத்சலம் அவர்கள் கொண்டிருந்த நாட்டம் வெளிப்படையானது; ஒளிவு மறைவில்லாதது; எல்லோருக்கும் தெரிந்தது. அவரால் தனக்குத் தானே வளர்த்துப் பூசனை செய்யப்பட்டு வந்துள்ள ஆசை, இந்தத் துணைக்கண்டம் சுதந்திரம் பெற்ற நாட்களைக் காட்டிலும் அதிக வயதானதாகும். பழமையான அவருடைய இலட்சியத்தில் புதுமையாகச் சேர்ந்திருப்பது என்னவென்றால், அவர் ஒரு வகையாக முதலமைச்சர் ஆக்கப்பட்டு விட்டார் என்பதுதான்.

"காமராசர் திட்டம்" முற்றும் துறந்துவிடும் மோன நிலைக்குத் தயாராகக் கூடிய பல 'ஞானி"களை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் என்று மிகப் பெரிய அளவில் விளம்பரம் கொடுத்து மாதக் கணக்கில் பிரச்சாரம் செய்யப்பட்டது. அந்தத் திட்டம் நடைமுறைக்குப் புகுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நேரத்தில், பல மாநிலங்களிலும் ஏற்பட்ட நிலைமையைப் பார்த்தால், "ஞானிகள்" தெரிவதற்குப் பதிலாக இத்தனை நாளும் ஜாடிகளில் அடைப்பட்டுக் கிடந்த அலாவுதீன் பூதங்களாக உருவெடுத்து நிற்பதைப் பல மாநிலங்களிலும் நம்மால் காண முடிகிறது. குறிப்பாக குஜராத் முதலமைச்சராக இருந்த டாக்டர் ஜீவராஜ்மேத்தா, தான் இராஜினாமா செய்ய வேண்டியேற்பட்ட காரணத்தைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, "மாநிலத்திலேற்படக் கூடிய எல்லாப் பிரச்சினைகளையும் மொரார்ஜி தேசாய் அவர்களின் பரிசீலனைக்குக் கொண்டு சென்று, அவர் தெரிவிக்கும் முடிவுகளையே இறுதியானதாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று காங்கிரஸ் மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்றும், அந்த உத்திரவை தன்னால் பின்பற்ற முடியாதாகையால் இராஜினாமா செய்ததாகவும்" தெரிவித்தார்.

ஜீவராஜ்மேத்தா தெரிவித்துள்ள கருத்து, காமராசர் திட்டத்தின் சாகசத்தை மட்டுமல்ல, அதனால் அரசாங்க இயந்திரத்துக்கு ஏற்படக்கூடிய அபாயங்களையும் சுட்டிக்காட்டுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். கட்சியைப் பலப்படுத்தும் பேரால் பதவியிலிருந்து விலகிய சாதாரண காங்கிரஸ்காரர்களுக்குத்தான் மாநிலத்தின் எல்லாப் பிரச்சினைகளிலும் இறுதி முடிவு தெரிவிக்க அதிகாரம் உண்டு என்பதும், அவர்களிடம்தான் மாநில முதலமைச்சர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் கொண்டுபோக வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடம் உத்தரவு பிறப்பிப்பதையும் ஜீவராஜ்மேத்தா மூலம் தெரிந்துகொண்ட பின்பும், காமராசர் திட்டம் பிரச்சாரம் செய்யப்படுவதுபோல் தியாகிகளை அறிமுகப்படுத்தி இருக்கிறதா அல்லது, பசுத்தோல் போர்த்தியே நடமாடுவதற்குத் துணிந்துவிட்ட புலிகளைக் காட்டுகிறதா என்பதைப் புரிந்துகொள்ளாதவர் இருக்க முடியாது.

அதேபோல, இராஜினாமா செய்துவிட்ட "தியாகி"களின் இடத்தைத் திறமையானவர்கள்தான் நிரப்புகிறார்களா அல்லது அந்த மாநிலத்தைச் சார்ந்த "தியாகி"யின் சொற்படி ஆடும்—அலாவுதீன் பூதத்தைப்போல் எஜமான் சொற்படி ஓடும்—ஆட்கள்தான் நிரப்புகிறார்களா என்பதை கனம். பக்தவத்சலம் அவர்களுடைய நிர்வாகம் நமக்குத் தெளிவாக உணர்த்திவிடக் கூடியதாகும்.

நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பக்தவத்சலம் அவர்கள் ஓர் "ஜாம்பவான்" என்று சொல்லத்தக்கவர். ஆனால், அந்த நிர்வாகத்தில் மக்களாட்சிப் பண்போ மனிதருக்குரிய கவுரவமோ இருந்ததாக கடந்த ஆண்டு கழகம் நடத்திய விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்தின்போது நம்மால் காணமுடியவில்லை. அவர் பதவி வகிக்காத அமைச்சரவை இல்லை. அவர் பெயர் என்றும் நிலைக்கும் வகையில் எந்தத் துறையிலாவது மக்களுக்குத் தொண்டாற்றி இருக்கிறாரா என்பதும் நமது நினைவுக்கு வரவில்லை. ஒருமுறை பொதுத்தேர்தலில் தோற்றுவிட்டபோதுங்கூட, பின்புற வழியாகத் திரு. பக்தவத்சலம் அவர்கள் சட்டமன்றத்திற்குள் கொண்டுவரப்பட்டு அமைச்சராக்கப்பட்டிருக்கிறார் என்றால், மக்களுக்கு அவரால் சிறந்த பயன் கிடைக்கிறது என்பதைவிட, அதிகார பீடத்திற்கு அவரைப் போன்றவர்கள் எப்போதும் தேவைப்படுகிறார்கள் என்பதுதான் நாம் கொள்ளும் முடிவாகும். கிடைத்த அதிகாரத்தை அதன் உச்சிவரைக்கும் சென்று பயன்படுத்துவதில் கனம். பக்தவத்சலத்திற்கு நிகர் அவரேதான். ருஷ்யப் பேரரசி காதரினைப் போல், கிடைத்த அதிகாரத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுத்து விடாத முறைகள் அவருக்கு மனப்பாடம். அவனைப் போலவே, பழங்கால இலக்கியங்களையும் தனது கருத்துக்கு ஏற்றவாறு பொழிப்புரை பதவுரைகள் மூலம் அணிசெய்வதும் அவருக்கு ஆகிவந்த கலை.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சங்ககாலப்பாடல் வரிக்கு கனம். பக்தவத்சலம் அவர்கள் தெரிவிக்கும் கருத்து, மொழிப்புலவர்கள் அனைவரையும் பிரமிக்க வைப்பதாகும். மற்றும் அவருக்குள்ள அத்தனைச் சிறப்புகளையும் நம்மால் தெரிவிக்கப்படவேண்டியதாக இந்த நாட்டு இதழ்கள் விட்டுவைக்கவில்லை. கட்சிக் கூட்டத்தில் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே, "மிகச்சரியானது" "இயற்கையானது" என்று "இந்து" இதழ் வருணித்தது. "அவருக்குள்ள பாரம்பரியம், அவருக்குள்ள அமைச்சரவை அனுபவம், அவருடைய கட்சிக் கொள்கைகளில் அவருக்குள்ள ஆழ்ந்த பற்றுதல் வேறு எந்தக் காங்கிரஸ்காரனுக்கும் இல்லை" என்றும் அதே "இந்து" இதழ் தனது தலையங்கத்தில் அறைகூவல் விடுத்துச் சொல்லிற்று.

இத்தனைச் சிறப்பு வாய்ந்த ஒருவர், இத்தனை ஆண்டுகளும் வெறும் அமைச்சராகவே இருக்கும்படி இதே "இந்து" இதழ் ஏன் விட்டுவைத்திருந்தது என்பது, நமக்குத் தெரியவே வேண்டாம். ஏனென்றால், மக்களாட்சியின் மாண்பை உயர்த்திக் காக்க வேண்டிய பொறுப்பான இடத்திற்கு யார் வரவேண்டும் என்பது பற்றி இந்த நாட்டு இதழ்களுக்கு என்றைக்குமே கவலை இருந்ததில்லை. அதிகாரத்திற்கு வந்துவிட்ட எவரையும் திருப்திப்படுத்தும் வகைக்குத்தான் நமது இதழ்கள் பழக்கப்பட்டிருக்கின்றன.

"இந்து" இதழ் வருணிப்பதுபோல், இத்தனைச் சிறப்புள்ள ஒருவர்—பக்தவத்சலம் போன்றவர்—காமராஜ் திட்டப்படி வெளியிலிருந்து கட்சியைப் பலப்படுத்தும் காரியத்திலல்லவா இறங்கவேண்டும். இந்த வாதம் "இந்து" இதழுக்குத் தெரியாமலில்லை. இருந்தும் வேறொன்றை மனத்தில் வைத்துத்தான் இப்படி அவரைத் தலைமேல்வைத்துப் புகழ்ந்திருக்கிறது. புதியதாக முதலமைச்சராகப் பதவி ஏற்றவரைப் புகழ்மொழிகளால் அர்ச்சித்த அதே தலையங்கத்தில் "இந்து" இதழ் எழுதுகிறது,

"காங்கிரஸ் கட்சியின் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களை நிறைவேற்றி திறமையான நிர்வாகத்தை மேற்கொள்வதோடு, சிறப்பாக இந்த மாநிலத்தில் தடுக்கவியலாத வளர்ச்சியுடன் காணப்படும் பிரிவினைவாதம் குறுகிய பிரதேசப்பற்று ஆகியவைகளை எதிர்த்துப் போராடுவதும் திரு. பக்தவத்சலம் ஏற்றுள்ள புதிய பொறுப்பின் முக்கியப் பணியாக விளங்கும்."

நிர்வாகத்தில் மலிந்துள்ள இலஞ்சக் கேட்டினை ஒழிக்கவோ, வாட்டி வதைக்குத் வரிக் கொடுமைகளிலிருந்து மக்களை மீட்கவோ, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கணிசமான அளவு குறைத்துக் காட்டவோ புதிதாக பொறுப்பேற்கும் முதலமைச்சருக்கு "இந்து" இதழ் போதனை புரியவில்லை. "பிரிவினைவாதம், குறுகிய பிரதேசப் பற்று" ஆகியவைகளை ஒழிப்பதுதான் முக்கியப் பணியாக இருக்க வேண்டுமாம்!

புதிய முதலமைச்சருக்கு "இந்து" இதழ் போதனை புரிகிறதா அல்லது நெடுநாள் கனவுக்குப் பின் வந்துற்ற முதலமைச்சர் பதவியை சீக்கிரமே விட்டுப்போகும்படி விருப்பம் தெரிவிக்கிறதா என்பதை நம்மைக் காட்டிலும், திரு. பக்தவத்சலம் அவர்கள் உணர்ந்து கொள்ளக்கூடியவர். அவரை இத்தனை நாளுக்குப் பிறகாவது முதலமைச்சராக ஆக்கியிருக்கும் சக்தி, தமிழர்களின் மொழிப் பற்றும், பிரிந்து விடுதலை காணவேண்டும் என்ற விருப்பமுந்தாம் என்பதை அவர் உணர்ந்திருப்பார் என்றே நம்புகிறோம்.

நீண்டநாட்களாக அவர் அமைச்சரவையில் இருந்ததற்குப் பெயர் சொல்லும்படியாக எதையுமே செய்யாத திரு. பக்தவத்சலம் அவர்கள், முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்ட முடுக்கில் இந்த நாட்டுப் பண்பாட்டினைக் காப்பதற்கும், தாய்த்தமிழைத் தாழ்த்தி இந்தியை அரியணை ஏற்றுதிருப்பதற்கும் பேருதவி செய்யவேண்டும்

(7-ம் பக்கம் பார்க்க)

மொழியார்வம் கொண்டோரே; விழிப்புணர்ச்சி கொள்வீர்!

தென் பாண்டி மண்டலத்தில் தென்னவர் தலைவர் போர்ப்பரணி!

இந்தி எதிர்ப்பு மூன்ருவது மாநாடு வெகு சிறப்பாக — அரிய முறையில் நடத்திக்காட்டியதைப் பாராட்டுகிறேன். சேலத்திலும்—தஞ்சையிலும் நடைபெற்றமாநாடுகள் பெரும் மழையால் பாதிக்கப்பட்டதைப் போல், நெல்லையிலேயும் ஆகிவிடுமோ என்று நான் அஞ்சினேன். சிவசாமிக்கு நான் எப்படி பயப்படுகிறேனே, அது போலவே மழையும் பயப்பட்டு நின்றுவிட்டது. (கையொலி)

சிவசாமி எந்த பொறுப்பையும் சாதாரணமாக ஏற்பதில்லை—ஏற்றுவிட்டால் எப்படி நடத்துவார் என்பதை இந்த மாநாடு காட்டிக்கொண்டிருக்கிறது. நெல்லையில் நடைபெறும் இந்த மாநாடு இவ்வளவு வெற்றிகரமாக நடைபெறுவதற்காக ஒத்துழைத்த எல்லா தோழர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லையம்பதி அல்லது பாண்டியமண்டலம் தமிழ் காக்க முன் வந்துள்ளது மிகவும் பொருத்தமானதேயாகும்.

முடியுடை மூவேந்தர்களும் ஏடெழுதிய தமிழ்ப் புலவர்களும் ஊட்டிய தமிழுணர்ச்சிக்கு ஊட்டமளிக்கும் வகையில் பாண்டிய மண்டலத்தில் நாம் தமிழ் காக்கப் புறப்படுவது நமது கடமையாகும்.

ஒரு இருபதாண்டுகட்கு முன்பு நானும்—நாவலர் சோமசுந்தர பாரதியாரும் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசுவதற்காக வந்திருந்தோம். சைவ சித்தாந்த பெரியவர்கள் அந்த கூட்டத்தை நடத்தினுர்கள். திருவரங்கம் பிள்ளை என்பவர் அந்தக் கூட்டத்திற்கான பணிகளைச்செய்தார்.

அது மாபெரும் கூட்டமாகும். அப்போதெல்லாம் 200 பேர் கூடினுல் அது மாபெரும் கூட்டம். ஆயிரம் பேர் கூடினுல் அது ஒரு மாநாடு; இதை நான் கூறவில்லை, நாடு அப்போது அப்படி இருந்தது என்பதை எடுத்துக்காட்டவே கூறுகிறேன். அந்தக் கூட்டத்திற்காக வந்திருந்த 200 பேரிலேயும் கலவரத்தை மூட்டிவிட்டார்கள். நாவலர் சோமசுந்தர பாரதியார், கலவரத்தைக் கண்டதும், "இளமையான தோற்றமுடைய அண்ணுதுரை இருக்கிருர். அவர் கூட்டத்தை நடத்துவார்" என்று கூறிவிட்டுப்

போய்விட்டார். நான் ஒரு வார காலமாக திருநெல்வேலியிலே தங்கி, திருவரங்கம்பிள்ளை அவர்களோடு கூட்டத்தை நடத்திவிட்டுச் சென்றேன், பாண்டிமண்டலம் அப்போது எனக்கு பக்கத்துணையாக உழைத்ததைப் போலவே இப்போதும் இந்த மண்டலம் நம்முடனிருப்பதைப் பார்க்கிறேன்.

அடிக்கடி உங்களைப் பார்க்க முடியவில்லை; பார்க்க முடியவில்லை என்ருல் தமிழகத்தின் கோடியிலே நெடுந்தூரம் வந்து போகும் நிலை ஒன்றைத் தவிர, வேறு பணிகள் அடிக்கடி இருப்பதால் சென்று விடுவதைத் தவிர பார்க்கக்கூடாது என்ற காரணமல்ல—தென் மண்டலத்திற்கும் சென்னைக்கும் இடையில் காறுகளும்மலைகளும் இருந்தாலும் உங்களிடையே உள்ள ஆர்வமும்—எழுச்சியும் — உணர்ச்சியும் குவிந்து கிடப்பதைக் காண்கிறேன். உங்களுக்குத் துணை போகும் குமரி மாவட்டத்தையும் கண்டு மகிழ்கிறேன்.

மாநாடு இவ்வளவு பெரிதாக நடைபெறும் — பல்லாயிரக்கணக்கானவர்கள் இங்கு கூடுவார்கள் என்று நான் நினைக்கவில்லை மக்கள் அளவு சிறிதாக இருக்குமென்று நினைத்தேன். என்னை ஏமாற்றியது மட்டுமல்ல-திக்குமுக்காடச் செய்து அகமகிழச் செய்திருக்கிறீர்கள். காலையிலே நடைபெற்ற ஊர்வலமும், வழிநெடுகிலும் அலங்கரிக்கப்பட்ட இலட்சிய முழக்கங்களின் வளைவுகளையும் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஊர்வலத்திலே கழகத் தோழர்களும்—மக்களும் வலம் வந்த காட்சியினையும் மாலையிலே காணப்படும் இந்த மாட்சியினையும் கண்டு பேருவகை அடைகிறேன்.

நெல்லையிலே காணப்படும் இந்தக் காட்சி நாம் துவக்க இருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நல்ல நியாயத்தின்பால் துவக்குகிருேம் என்பதைக் காட்டுகிறது.

நாம், சட்டத்திற்குட்பட்ட முறையில் அமைதி கெடாத வகையில் இயக்கத்தை நடத்தி வந்துள்ளோம். அப்படியானுல் இன்று ஏன் கிளர்ச்சியை நடத்துகிறீர்கள் என்று கேட்கலாம்.

சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் போராட்டங்களை நடத்தி கட்சியை வளர்க்கவேண்டும் என்ற மன எரிச்சல் உடையவர்களல்ல நாம். சட்டத்திற்குட்பட்ட முறையில் போராட்டத்தை நடத்தவேண்டுமென்று கழகத் தோழர்களையும் — தொழிலாளர்களையும்— உழவர்களையும்-பொதுமக்களையும் கட்டிக் காத்துக் கொண்டு — தமிழகத்திலே இவ்வளவு பெரிய கட்சியை வளர்த்து வருகிருேம்.

வீண் கலவரத்தில் நாம் மனதை நாடச் செய்வதில்லை; அமளிகளில் ஈடுபட்டதில்லை; ஏதாவதொரு கிளர்ச்சியை எப்போதும் செய்து கொண்டே இருக்கவேண்டுமென்று எண்ணியதுமில்லை.

அமைதியான அரசியலை விரும்புகிறது தி. மு. கழகம். அப்படிப்பட்ட நாம் மகத்தானதொரு போராட்டத்தை ஏன் நடத்தவிருக்கிருேம்?

போராட்டத்தை நடத்தித்தான் கழகம் வளரவேண்டுமா? 4870 கிளைக்கழகங்களையும் 1500 உட்கிளையும் கொண்ட மகத்தானதொரு அமைப்பை உடையவர்கள் நாம். இவ்வளவையும் உணர்ந்திருட்பவர்கள் கிளர்ச்சி நடத்தித்தான் கட்சியை வளர்க்கவேண்டுமென்று கருதுபவர்கள் அல்ல. இது தெரியாதவர்கள் தான் கதைப்பார்களே தவிர, அரசியல் அறிந்தவர்கள் சொல்ல மாட்டார்கள்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நாம் ஏறவேண்டிய படிக்கட்டுகளை ஏறிப் பார்த்து விட்டோம். பார்க்க வேண்டியவர்களை எல்லாம் பார்த்துவிட்டோம்—எழுத வேண்டியவைகளை எழுதி விட்டோம்— பேசவேண்டியவைகளை பேசிவிட்டோம் — இவ்வளவையும் இந்த அரசு துச்சமாக மதிப்பதால் சனநாயக உணர்வை மதியாதததால் — இந்த தலைக்கனமேறிய அரசை எதிர்த்து போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு

இந்திவெறியின் தலைக்கனம் அடங்க வந்திடுவீர் போர்க்களம் நோக்கி !

வழியில்லை என்று தி. மு. க. கைக் கொண்டிருக்கிறது.

போக்கிரிதான் திரும்பத்திரும்ப சண்டைக்குப் போவான்; சாது சண்டைக்குப் போனாலோ சாமான்யத்தில் ஓயமாட்டான். அதுபோல அரசியல் வட்டாரத்தில் கழகம் சாதுவான கட்சி, அதை நடத்திச் செல்லும் நான் மிகமிகச் சாதுவானவன், இதை நமது தோழர்களே கூட அடிக்கடி சொல்லுவார்கள்.

இந்தி திணிப்பு என்பது ஆதாரமற்றது என ஆட்சியாளர்கள் மறுக்கிறார்கள். இந்தி திணிப்புக்கான ஆதாரங்களை நாம் அடுக்கிச் சொன்னாலும்—புள்ளி விபரங்களை எடுத்துக் கூறினாலும் அரசு ஏற்க மறுக்கிறது.

இந்தித் திணிப்பை எதிர்த்து நாம் நடத்தும் போராட்டத்தில் உயிரை இழந்தாலும்—உடமைகளை இழக்கக்கூடிய நிலை ஏற்பட்டாலும் — சிறை - சித்ரவதைகளை அனுபவிக்கவேண்டிய கொடுமைகளை உணர்ந்திருந்தாலும் இதை மக்கள் மன்றத்திலே எடுத்துக் கூறுகிறோமென்றால், நாம் கூறுவதை ஆட்சியாளர்கள் உணரவில்லை—துச்சமென மதிக்கிறார்கள் என்பதை நாட்டுக்கும்—நல்லவர்களுக்கும் எடுத்துக்காட்டத்தான் என்பதை மறக்கவேண்டாம்.

இந்தச் செய்திகளை நாவலர் சட்டமன்றத்திலே எடுத்து சொன்னார். நாங்களும் டில்லி வட்டாரத்திலே எடுத்துச் சொன்னோம். ஒரு சனநாயக ஆட்சி இதை கேட்க வேண்டுமா? கேட்க வேண்டாமா? அங்கேயிருக்கும் எல்லா கட்சிகளையும் கேட்கிறேன்—கட்சிகளைச் சாராது ஒதுங்கியிருப்பவர்களையும் கேட்கிறேன் — ஆட்சி அறநெறிப்படி நடக்க வேண்டுமென்போரைக் கேட்கிறேன்.

நாங்கள் கூறும் காரணங்களைக் கேட்டபிறகும் ஒரு அரசு மதியாமல் இருக்கிறதென்றால் அந்த அரசை என்ன செய்யவேண்டும்.

பிடிவாத குணமுடைய அத்தகைய அரசை மாற்றியமைக்க வேண்டும்—மற்றொன்று அரசை மாற்றியமைக்குமளவிற்கு மக்களைத் தயார் செய்து போராட்டங்களை நடத்தி பேராடியே திருத்த வேண்டும். இதைத் தவிர வேறு காரணங்களிருந்தால், அரசியல் வாதிகள் கூறவேண்டுகிறேன்.

இந்தியப் பேரரசு முழுவதற்கும் இந்தி மொழிதான் ஓரரசு மொழியாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

இந்தி போராட்டக் குழு சுற்றுப்பயணம் போனபோது தோழர்கள் போராட்ட வீரர்கள் பட்டியலிலே அவர்களது பெயர்களையும் கொடுத்துள்ளார்கள். பெயரைக் கொடுக்காதவர்கள் அவரவர் பெயர்களைப் பட்டியலிலே பொறித்துக்கொள்ள வேண்டும்.

நாம் துவங்கயிருக்கும் போராட்டம் நான்கு நாளில் துவண்டு விடுவதல்ல வாணவேடிக்கை போல் வானில் பல வண்ணங்களைத் தூவி மறைவதல்ல; நின்று நிலைத்து பகையை வென்று இலட்சியத்தை நிலைநிறுத்துமளவுக்கு பல்லாண்டு காலமாக நடைபெறும் போராட்டமாக இருக்கும்.

நாம் நடத்தும் போராட்டம் தூய்மையானப் போராட்டம்—இந்திக்கும் — தமிழுக்கும் நடத்தும் போராட்டமல்ல. இந்திப் புலவர்களுக்கும்—தமிழ்ப் புலவர்களுக்கும் இடையே நடைபெறும் போராட்டமல்ல. இந்திப் புலவர்களுக்கும்—தமிழ்ப் புலவர்களுக்கும் நடத்தும் போராட்டமானால் நமது நாவலர் ஒருவர் போதும்.

எலும்பைப் பெண்ணாக்கியது எம்மொழி தமிழ் மொழி என்று கூறி இந்தியை எதிர்த்தவர் இவ்வூர்ப் பெரியார் திருவரங்கம் பிள்ளை. எனவே மொழியின் பெருமையை வாதிட்டு மெய்ப்பித்துக் காட்ட முடியும்.

தாய்மொழி தமிழைக் காக்கத்தான் நாம் போராடுகிறோம். நம்முடைய இதயத்திலே தமிழை உயிரினும் இனியதாகப் பேணி போற்றுகிறோம். ஆங்கிலத்தை தமிழுக்கு அடுத்தபடியாகவே வைத்து இருக்கிறோம்.

நாங்கள் ஆங்கிலம் படித்தவர்கள். எங்களிலே எம்.ஏ., பி.ஏ. பட்டதாரிகள் ஏராளம் என்றாலும் எங்களுக்கு ஆங்கிலத்தின் மீது மோகம் கிடையாது.

நான் கல்லூரியை விட்டு வெளியே வந்தபோது ஆங்கிலத்தில்தான் பேசத் தெரிந்தவன். லயோலா கல்லூரியில் ஆங்கிலப் பேச்சில் பரிசும் பெற்றவன். தமிழறிந்தவர்கள் யாராவது ஆங்கிலத்தில் பேசினாலும் நான் தமிழில்தான் இன்றும் அவர்களிடம் பேசுகின்றேன். இப்போதும் மாநிலங்களவையில் ஆறு வாரத்திற்கோ எட்டு வாரத்திற்கோ ஒருமுறைதான் ஆங்கிலத்திலே பேசுகிறேன்.

தமிழுக்கும் — தமிழகத்துக்கும் எந்த அளவில் தமிழ்த் தொண்டு புரியவேண்டுமோ அதை எனது பொதுவாழ்விலே குறிப்பாகச் செய்துவர வேண்டுமென்ற எண்ணத்திலே எனது கடமையைச் செய்து வருபவன்.

ஆனால், சிலர் ஆங்கிலத்தின் மீதுதான் எங்களுக்கு மோகம் என்கிறார்கள். ஆங்கில மோகம் என்றால் இந்த மைதானத்திலே நான் பேச வேண்டியதில்லை. மணி மண்டபங்களிலே பத்து சீமான்களை கூட்டி வைத்துக் கொண்டு லேடீஸ் அண்டு ஜெண்டில்மென் என்று பேசினால் போதும்.

ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுபவர்களை நான் வரவேற்கிறேன். ஆங்கில ஆதிக்கத்தை அகற்றினால் அவர்களுக்கும் நான் நண்பன். ஆங்கில ஆதிக்கத்தை அகற்ற முற்படும் எனது நண்பர் சிவஞானத்திற்கு இந்தியை எதிர்க்க நேரமில்லை.

இந்தியை எதிர்த்தால் ஆட்சியாளர்களின் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டுமென்று நினைத்து இந்தியை விட்டுவிட்டு இல்லாத ஆங்கில ஆதிக்கத்தை வருவித்துக்கொண்டு ம. பொ. சி. எதிர்க்கிறார்.

ஆங்கிலேயன் இருந்து ஆங்கில ஆதிக்கத்தைப் புகுத்தினால் அது ஆதிக்கம். ஆதிக்கம் என்றால், ஒரு தனி ஆளோ-குழுவோ கட்டளையிட்டு செய் என்றால் அதற்கு ஆதிக்கம் என்று பெயர்.

நீங்கள் உள்ளபடியே இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதானால் ஒரு சேர வாருங்கள். நாங்கள் ஆங்கில ஆதிக்கத்தை உங்களோடு சேர்ந்து எதிர்க்க பிறகு வருகின்றோம்.

உண்மையான ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு தி. மு. கழகத்திற்கும் உடன்பாடாகும். அவர்கள் இவ்வளவு கூறியதற்குப் பிறகும் நம்முடன் வருவார்களா? அவர்கள் வரும்வரை இரயில் போய்க் கொண்டுதான் இருக்கும். வருபவர்கள் வரலாம். ஆனாலும் சேர வாரீர் செகத்தீரே என்று அவர்களை அழைக்கிறேன்.

தனித் தமிழை நாங்கள் பின்பற்றுவதால், எங்களைத் தமிழ் மோகி என்றுதான் கூறுகிறார்கள்.

அரசினரால் இயற்றப்படும் சட்டங்கள் தமிழிலேயே இருக்க வேண்டும். அரசு அலுவலகங்கள் முதல் நீதி மன்றங்கள்வரையிலும் நடைபெறும் எழுத்து—பேச்சு அனைத்தும் தமிழிலேயே இருக்கவேண்டும்; தமிழ் தெரிந்தவர் தமிழிலேயே பேசவேண்டும் என்று எண்ணுபவர்கள் நாம். உண்மை ஆங்கில எதிர்ப்பு கழகத்திற்கு உடன்பாடாகும் இப்படிப்பட்ட நாங்களா ஆங்கில மோகிகள்? நான் மோகம் வரும் வயதினனுமல்ல; அது எங்களது காரியமும் அல்ல.

நாங்கள் ஆங்கிலத்தை மட்டும் ஆட்சிமொழியாக்கச் சொல்லவில்லை. 14 மொழிகளையும் ஆட்சி மொழியாக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

மாநிலங்களவையில் 14 மொழிகளையும் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று நான் கூறினேன். பண்டித நேரு அதற்கு பதிலளித்தபோது, ‘14 மொழிகளையும் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நல்ல திட்டம்தான். அதற்கு உதாரணமாக சுவிட்சர்லாந்து நாட்டில், மூன்று மொழிகள் தேசிய மொழியாக்கப் பட்டுள்ளதையும் கூறினார்கள். ஆனால் சுவிட்சர்லாந்து சிறிய நாடு. அங்கே இந்த திட்டம் வெற்றி பெறுகிறது, இந்தியாவில் 14 மொழிகளையும் ஆட்சிமொழியாக்குவது கடினம்'' என்றார்.

சிறிய நாடு என்றால் அதற்கு எவ்வளவு வசதி இருக்கிறது என்பது தெரிகிறதல்லவா? அந்த சிறிய நாடு நமக்கும் கிடைத்தால் கட்டி வாழலாம்—சிறப்பாக இருக்கலாம் என்ற ஆசை அலைகள் அப்போது என் எண்ணத்தில் வட்டமிட்டன.

14 மொழிகளையும் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று நான் கூறும் திட்டத்தில் சிக்கல் இருக்கலாம். சுவிட்சர்லாந்தில் மூன்று மொழிகள் இருப்பதைப் போல, இங்கேயும் 14 மொழிகள் ஆட்சி மொழியாக்கப் படுவதால் சிக்கல்கள் வரலாம். ஆனால் 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக வரும்வரை ஆங்கிலமே இருக்கட்டும் என்பதற்காகவே கூறுகிறேன்.

பாராளுமன்றத்தில் யசோதா ரெட்டி என்ற காங்கிரஸ் அம்மையார் இந்தியினால் வரும் கேடுகளை எடுத்துச் சொன்னார்கள். பக்கத்திலே லால்பகதூர் சாஸ்திரி இருந்தார். அப்போது; ‘மை ஹஸ்பெண்டு ஈஸ் ஏன் எக்சாம்பிள்’ என்று உதாரணம் காட்டிப் பேசினார். இதற்கு லால்பகதூர் பதில் கூறுவார் என்று எதிர்பார்த்தேன்.

இந்தி படிக்காததால் தொல்லைகள் வரும் என்று யசோதா ரெட்டி சொன்னார். அது தவறு: அப்படி வராது என்று லால்பகதூர் அம்மையாருக்கு உறுதி கூறவில்லை. பெண் என்றால் பேயும் இறங்கும். ஆனால் லால்பகதூருக்கு அந்த இரக்கமே வரவில்லை. அந்த அம்மையார் இந்தியினால் வரும் கேடுகளை விளக்கி பாராளுமன்றத்தில் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறேன். என்று தலைக்கு மேலே கையெடுத்துக் கும்பிட்டு திரும்பித் திரும்பி மந்திரிகளைப் பார்த்துக் கேட்டார். இந்த அரசு கேட்கவில்லை; அதை மதிக்கவில்லை.

சொந்தக் கட்சி உறுப்பினர் கையெடுத்துக் கும்பிட்டுக் கூறியதையும் ஏற்கவில்லை. எதிர்க்கட்சிகள் புள்ளி விபரத்தோடு விளக்கியதையும் கேட்கவில்லை என்றால் பிறகு யார் கூறி எதற்குத்தான் கட்டுப்படுவார்கள்?

ராசாசி இந்தி வந்தால் தமிழ் கெடும் என்று கூறவில்லை. ஆனால் நாம் இந்தி வந்தால் தமிழ்

இந்தியை எதிர்க்க காங்கிரஸ்காரர்களுக்கு அண்ணு அழைப்பு

——(0)——

தமிழ்மொழி தொன்மையானது. புனிதமானது—இலக்கிய இலக்கண வளமுடையது. என்று கூறிக்கொண்டே நம்மீது இந்தியைத் திணிக்கிருர்கள், இது வேதனையான—விபரீதமான விசித்திரம். தமிழ் மொழி கொட்டிலிலும்—இந்தி மொழி தொட்டிலிலும் இருக்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

ஒரு மொழி நமது மொழியைவிட உயர்வானது என்ருல், அதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் உயர்வானது என்பதற்காகவாகிலும் கேட்கலாம். ஆனல் நமது மொழியைவிட தாழ்வானதுதான் என்று கூறிக்கொண்டே இந்தியை நம்மீது திணித்தால், இதை தமிழறிந்தோர் எப்படி பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

தமிழ் உயர்வானது — சிறப்பானது — மேன்மையானது என்று கூறிவிட்டு இருந்தாலும் இந்தியைத்தான் ஆட்சி மொழியாக ஏற்கவேண்டுமென்ருல் சிறிது அறிவுடையவனும் எப்படி ஏற்பான் ?

உண்மையான காங்கிரசுக்காரர்களைக் கேட்கிறேன், நீங்கள் இதை ஒப்புக்கொள்கிறீர்களா? எப்படி அந்தக் காலத்தில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டிட காங்கிரசுக்காரர்கள் முனைந்தார்களோ, அதுபோலவே, இந்தி ஏகாதிபத்தியத்தை விரட்ட அணிவகுத்து வாருங்கள். தமிழ் காக்கும் போராட்டத்தில், தமிழ்ப் பற்றுடைய காங்கிரசுக்காரர்கள் காங்கிரசை விட்டு வெளியேறி இந்தியை ஒழிக்கத் திரள வேண்டுகிறேன்.

—நெல்லை மாநாட்டில் அறிஞர் அண்ணு

கெடும் என்கிருேம். முன்பெல்லாம் அகநானூறு படித்தாயா? சிலம்பு படித்தாயா? என்று கேட்டு உத்தியோகம் தரப்படவில்லை. ஆங்கிலம் தெரிந்ததைக் கொண்டே உத்தியோகம் தரப்பட்டது.

இந்திவந்தால் இருபது ஆண்டுகட்கு முன்பு தமிழ்ப் புத்தகங்கள் எப்படி அலமாரிகளில் இருந்தனவோ, அந்த நிலை நிச்சயமாக ஏற்பட்டே தீரும். இதை மறைந்த தமிழ் மேதைகளான திரு. வி. க., மறைமலையடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றவர்கள் தெளிவாகவே கூறினுர்கள். இந்த முடிவுகளையெல்லாம் கண்ட பிறகுதான், புலவர்கள் கூறியதைப்பற்றிக் கவலைப்படுகிருேமே தவிர புவியாள்வோர் கூறுவதைபபற்றிக் கவலைப்படாமல் நாம் போராடவேண்டியிருக்கிறது. நீங்களும் இதை உணர வேண்டும்.

விலைவாசிப் போராட்டத்தின் போது, 3 மாதம், 6 மாதம் என்று நம்மை சிறையிலே தள்ளினுர்கள். கோவிந்தசாமியா? நாவலரா? கருணுநிதியா? ப. உ. சண்முகமா? இந்தப்பயல்கள் இந்த ஆண்டு சிக்கினுல், வெளியே உலவவிடாமல், பல்லாண்டுகள் சிறையிலே தள்ளிப் பூட்டிவிட்டால், அடுத்த தேர்தலில் ஒரு கை பார்த்துவிடலாம் என்று ஆட்சியாகளர்கள் நினைக்கிருர்கள்.

எனக்கும் அப்படிப்பட்ட ஒரு ஆசை உண்டு. போராட்டத்திலே ஈடுபட்டு பல்லாண்டுகள் சிறையிலே தள்ளப்பட்டால், இந்தக் கட்சி வளருகிறதா — இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும் என்று. அப்படி வளராவிட்டால், இது கட்சி என்ற யோக்கியதையைப்பெருது; அப்படிப்பட்ட கட்சியும் தேவையில்லை—நானும் அந்தக் காட்சியை நடத்த லாயக்கு இல்லாதவனுவேன்.

இந்தக் கட்சி அடுத்த தேர்தலுக்குள் சிறைக்குள் போகாதா? சுலபமாக வெற்றி பெற மாட்டோமாயென்று எண்ணுகிருர்கள். அடுத்த தேர்தலில் உங்களை சுலபமாக விடமாட்டோம். இந்தியையும் எதிர்ப்போம்—தேர்தலையும் ஒரு கை பார்ப்போம். தொகுதிக்குத் தொகுதி — தெருவுக்குத் தெரு—சந்து முனைக்குச் சந்து முனை உங்களை ஓட ஓட அலைய வைப்போம்.

காமராசர் திட்டத்தைப்பற்றி மத்திய அமைச்சராக இருந்த பட்டீல் கல்கத்தாவில் கருத்து வெளியிட்டார். அவர் உண்மையைக் கூறிவிட்டார்.

தன்னுடைய ராச்சியத்தில் தி. மு. க. வை ஒழித்து காங்கிரசைப் பலப்படுத்த காமராசர் திட்டமிட்டார் என்று கூறினுர். இதை பத்திரிகைகளெல்லாம் எழுதின. இதில் தி. மு. க. என்று வரும் வாசகத்தை அப்படியே எடுத்துவிட்டு எழுதின. 'இந்து' பத்திரிகை பட்டீல் பேச்சை அப்படியே வெளியிட்டது மற்ற பத்திரிகைகள் தி. மு. க. என்ற வார்த்தையை மென்று தின்ருர்களோ — கொன்று போட்டார்களோ அல்லது கொடுத்த சம்பளத்திற்கேற்ற வேலையாகச் செய்தார்களோ—அந்த பதத்தையே அகற்றி செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

வெளியே இருப்பதால் ஆசாமிகளுக்கு வேலை நடைபெறவில்லை. திறந்த வீட்டிலே; யாரும் நுழையலாம். என்பதைப்போல, அவர்கள் திட்டமிடுகிருர்கள்.

நாங்கள் சிறைக்கு உள்ளேயும் இருப்போம்—வெளியேயும் இருப்போம். அடுத்த தேர்தலில் உரிய பக்குவத்திற்கேற்ப இந்தப் பிரச்சினையை மக்கள் முன்பு வைப்போம்.

கூழுக்கும் ஆசையா? மீசைக்கும் ஆசையா? என்பார்கள். ஆமாம். கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசைதான். மீசையுடையவன் கூழ் குடிக்கும் போது மீசையைத் தூக்கி விட்டுத்தான் கூழைக் குடிப்பான். அதை நேரில் பார்த்தவர்களுக்கோ—அல்லது மீசையுடையவன் கூழ் குடிக்கும் அனுபவத்தை அறிந்தவனுக்கோதான் தெரியும். கோட்டையைக் காவல் புரிந்தால் உரிமை பறிபோகும்—உரிமையைக்'காத்தால் கோட்டை பறிபோகும். எனவே, கோட்டைக்குக் கோட்டை காவல் இருப்போம்.

நாம் நடத்தும் போராட்டம் அரசியல் அறநெறிப் போராட்டமாகும். தங்கக் கட்டுப்பாடு திட்டத்திற்கு இந்த அளவுக்குக் கட்டுப்பாடு இல்லையே என்பீர்கள். அது பணக்காரன் பிரச்னை அதிலே நாம் இவ்வளவு தீவிரம் காட்டவில்லை.

இத்துணை பெரும் பிரச்னைக்கு புலவர்கள்—மேதைகள் — மொழி வல்லுநர்கள் கூறிய யோசனைகளை கேட்கவில்லை என்ருல், அந்த ஆட்சிக்கு எவ்வளவு தலைக்கனம் இப்படிப்பட்ட ஆட்சி சனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் என்பதை நான் கூறியா நீங்கள் தெரியவேண்டும்.

விழிப்புணர்ச்சிதான் ஒரு நாட்டின் விடுதலையைப் பாதுகாக்கும் என்பது மேல் நாட்டுப் பழமொழி.

மக்களாட்சி ஆனபின், இந்த நாட்டில் அநீதியைக் கண்டபோது கண்டிக்க—நீதியை நிலைநாட்ட—நேர்மையைக் கடைப்பிடிக்க—சனநாயகப் பேயர்களை நாம் கண்காணித்துவர விழிப்புணர்ச்சி பெறவேண்டும்.

பத்திரிகைகளின் இருட்டடிப்புக்கு மத்தியில் நாம் கட்சியை நடத்துகிருேம். காங்கிரசு இயக்கம் சத்தியாக்கிரகம் நடத்திய போது என். வி. என். சத்தியாக்கிரகம் செய்வதாக இருந்தால், என். வி. என். சத்தியாககிரகம் செய்வார் என்று முதலில் பத்திரிகைகள் வெளியிடும். பிறகு என். வி. என். சத்தியாக்கிரகம் செய்யப்போகிருர் என்று போடும். இன்று சத்தியாக்கிரகம் செய்யப் போகிருர் என்று வெளியிடும்.

இந்த சூழ்நிலை காங்கிரசு வட்ரத்திற்கு உருவாகும். இதைக் கண்டு மக்கள் விம்மவும், உணர்ச்சி பெறவும்—பெருகவும் வழியாகும்.

நாவலர் நெடுஞ்செழியன் நமது போராட்டத்தில் கைதானுர் என்ருல், நெடுஞ்செழியன் கைதானுர் என்று மட்டுமே பத்திரிகைகள் எழுதும். அவர் கைதாகும்போது நான் அருகிலிருந்து, என்னை அவர் பார்த்தார் என்ருல் அடப்பாவி உன்னுல்தானே நான் சிறைக்குப் போகிறேன். எனது மனைவி—குழந்தை என்ன கதியாவது என்று பார்ப்பதைப்போல் அவர் என்னை முறைத்து—கோபமாகப் பார்த்ததாக செய்தி வெளியிடும். நெடுஞ்செழியன், குழந்தையை பரிதாபத்தோடு பார்த்தார் என்று எழுதும்—இப்படித்தான் நம்மைப்பற்றி பத்திரிகைகள் போராட்ட நேரத்தில் செய்திகளை வெளியிடும்.

இருட்டடிப்பு மட்டுமல்ல; இட்டுக்கட்டுவதையும் நாம் போக்க வேண்டும். அது போகவேண்டுமானுல் நீங்கள் ஒவ்வொருவரும் நடமாடும் பத்திரிகைகளாக மாற வேண்டும்.

ஒருவர் பிள்ளை போராட்டத்தில் சிறைக்குச் சென்ருல், ஐயோ பாவம், மொழி காக்க அவர் பிள்ளை சிறை புகுந்தான்—என்பதை நீங்கள் தெருக்களிலே பேச வேண்டும். அது ஒன்றுதான் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவருக்கு காட்டும் ஆதரவாகும்.

போராட்டம் எப்போது எப்போது என்று கேட்கும் பத்திரிகைகள், போராட்டம் நடைபெறும்போது, செய்திகளை இருட்டடிப்பு செய்யக்கூடும்.

எப்படி போராட்டத்தை நடத்துவது என்னென்ன செய்வது என்பதை நாங்கள் கலந்துபேசி சென்னையில் நடைபெறும் மாநாட்டில் அறிவிப்பேன்.

போராட்டம் ஒரே ஊரில் நடைபெறுமென்றும் கூறவில்லை. போராட்டம் பல மண்டலங்களாகப் பிரிந்து நடக்கும். சென்னையிலும் நடைபெறும்—தஞ்சையிலும் நடைபெறும்—நெல்லையிலும் நடைபெறும்—எல்லா ஊர்களிலும் நடைபெறும் என்று கூறவில்லை. சில காலம் இங்கேயும்—சில காலம் வேறு இடங்களிலேயும் நடைபெறும்.

எனவே கழகத்தோழர்களும் ஆதரவாளர்களும்— பொதுமக்களும் இந்தி எதிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட அனைவரும் திரண்டு வர வேண்டும். தாய்மொழி தமிழுக்கு ஏற்பட்ட ஆபத்தைத் தடுக்க நீங்கள் அனைவரும் தியாகம் புரிய வேண்டும். இந்திவெறியர்களின் தலைகனத்தை அப்போது தான் உங்களால் அடக்க முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

22.9.63 அன்று

—என்று அறிஞர் அண்ணு அவர்கள் நெல்லையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் குறிப்பிட்டார்.

வரலாறு கண்டிராத வீரர்களின் பவனி! நெல்லைமாநகரே விழாக்கோலம் பூண்டது!

கோட்டையில் புறப்பட்டு பேட்டையில் சேர்ந்தது!

இந்தித் திணிப்பைத் தகர்த்தெறிவோம்! அறப்போர் வீரர்களின் உறுதிமொழி!

மதுரை, இராமநாதபுரம், நெல்லை, குமரி மாவட்டங்கள், கேரள மாநிலம் ஆகியவைகளைக் கொண்ட பாண்டிய மண்டலத்தின் இந்தி எதிர்ப்பு மாநாடு 22—9—63 அன்று நெல்லை—பேட்டையில் அமைக்கப்பட்ட தூத்துக்குடி தாளமுத்து அரங்கில் சீரும் சிறப்புடனும் நடைபெற்றது. இது, மாநில மாநாட்டைப் போல நடைபெற்றது என்று கூறினும் மிகையாகாது.

பாசறைக்கூட்டம்

பாண்டியமண்டலத்தின் கழகப் பிரதிநிதிகளைக் கொண்ட பாசறைக்கூட்டம் 21—9—63 மாலை 6-மணிக்கு மாநாட்டுத்திடலில் தாளமுத்து அரங்கில் பிரத்யேக பந்தலில் நடைபெற்றது. 162 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

போராட்டக்குழுத்தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமைவகித்து, இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கழக நிர்வாகிகள் ஆற்றவேண்டிய கடமைகளை விளக்கினார்.

பின்னர் பல தோழர்கள் தங்களின் அரிய யோசனைகளைத் தெரிவித்தனர்.

கழகக் கிளைகளை மேலும் மேலும் வலுப்பெறச் செய்க!

இந்தி எதிர்ப்பு அறப்போர் இனிதே நடைபெறுவதற்காக இன்றியமையாததாக பயன்படவேண்டியது, நமது கிளைகளின் கட்டுக்கோப்பும், கழகத்தினரிடையே நிலவும் தோழமையுமாகும்—எனவே வட்டச்செயலாளர்கள் கிளைக் கழகங்களிடமும், மாவட்டச்செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகளுடனும் தொடர்பு கொண்டு ஒவ்வொரு கிளையும் வலிவுடன், பொலிவுடன் இயங்க உடனடியாக தக்க கவலை செலுத்த வேண்டும் என்று அமைப்புச் செயலாளர் என். வி. என். கூறினார்.

உறுதிமொழி!

இறுதியாக போட்டக்குழுத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பிரதிநிதிகள் எழுப்பிய சில ஐயப்பாடுகளுக்கு விளக்கம் தந்து தந்துவிட்டு,

"இந்தி திணிப்பைத் தகர்த்தெறிய எல்லாவித தியாகங்களையும் ஏற்றுக்கொள்ள"...... என்றுகூற "நாங்கள் தயார்" என்று அனைவரும் எழுச்சியுடன் கூறி உறுதி எடுத்துக் கொண்டனர்.

மாநாட்டுச் செயலாளர் எம். எஸ். சிவசாமி நன்றி கூற பாசறைக்கூட்டம் இரவு 10—30 மணிக்கு முடிவுற்றது.

எழுச்சிமிக்க ஊர்வலம்!

22—9—63 காலை 9-மணிக்கு பாளையங் கோட்டையிலிருந்து அறப்போர்வீரர்கள் ஆயிரக்கணக்கில் சூழ, பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் திரள, பலவித வாத்தியக் குழுக்கள், சிலம்ப ஆட்டம், இந்தி அரக்கியை விரட்டும் வேடம், தாரை தப்பட்டை, குதிரைப்படை, யானைப் படைகளுடன் அறப்போர் வீரர் படை பவனி வந்ததை எப்படிச் சிறப்பிப்பதென்று புரியவில்லை.

மாநாட்டுத் தலைவர் எ. கோவிந்தசாமி, திறப்பாளர் ப. உ. சண்முகம் எம்.எல்.எ. வரவேற்புத்தலைவர் கலைஞர் கருணாநிதி எம்.எல்.எ. செயலாளர் என். வி. என். ஆகியோர் ஜீப் காரில் நின்று அனைவருக்கும் வணக்கம் செலுத்தி வந்தனர். அவர்களைத் தொடர்ந்து பிரச்சாரச்செயலாளர் சத்தியவாணிமுத்து, மாவட்டச் செயலாளர்கள், வேறு ஒரு ஜீப் காரில் அமர்ந்துவந்தனர்.

ஊர்வலத்தின் இறுதியில் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பல ஊர்களிலிருந்து தனி பஸ்கள் மூலமாக கழகத் தோழர்கள் மாநாட்டுக்கு வந்திருந்தனர். வீதிகளெங்கும் வளைவுகளும், தோரணங்களும் ஆயிரக்கணக்கில் அமையப்பெற்றிருந்தன.

முஸ்லீம் லீக், சுதந்திரக்கட்சி சார்பிலும் வளைவுகள் அலங்கரிக்கப்பட்டுத் தலைவர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஊர்வலம் மாநாட்டுத்திடலை பிற்பகல் 2-மணிக்கு அடைந்தது. உடனே மாநாட்டுத் தலைவர் எ. கோவிந்தசாமி, கழகக்கொடியை ஏற்றிவைக்க ஊர்வல நிகழ்ச்சி இனிவு முடிவுற்றது.

மாலை 4 மணிக்கு மாநாடு துவங்கிற்று. மாநாட்டுச் செயலாளர் எம். எஸ். சிவசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அமைப்புச் செயலாளர் என். வி. என். மாநாட்டின் குறிக்கோள் பற்றிப் பேசியதுடன் மாநாட்டைத் துவக்கி வைக்குமாறு ப. உ. ச. அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தோழர் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ. மாநாட்டைத் துவக்கி வைத்து விரிவுரையாற்றினார்.

வரவேற்புத் தலைவர் கலைஞர் கருணாநிதி அனைவரையும் வரவேற்றுப் பேசியதுடன், மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு தோழர் எ. கோவிந்தசாமி அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தோழர்கள் எஸ். முத்து, பி. எம். கண்ணு, மசூத், அ. பொ. அரசு, மஸ்தான், எம். எஸ். மணி, ஆலடி அருணா ஆகியோர் வழிமொழிந்தனர்.

அடுத்து தோழர் எ. கோவிந்தசாமி அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்து அரிய்தோர் சொற்பொழிவாற்றியதும் இந்தி எதிர்ப்பு தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தீர்மானத்தின் மீது தோழர்கள் காவேரி மணியம், இரத்தினவேல் பாண்டியன். சத்தியவாணிமுத்து, நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர். தீர்மானம் பலத்த கையொலி ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து அறிஞர் அண்ணா அவர்கள் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினார். எம். எஸ். சிவசாமி நன்றி கூறினார்.

இரவு முரசொலி நாடகமன்றத்தினரால், கலைஞர் கருணாநிதி தீட்டிய 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' நாடகமும், முரசொலி மாறன் தீட்டிய வஞ்சியும் காஞ்சியும் என்ற ஓரங்க நாடகமும் நடைபெற்று மாநாடு இனிது முடிவுற்றது.

ஃ

மாணவர் இந்தி எதிர்ப்பு

சிறப்பு மாநாடு

——(ஃ)——

திருச்சி மதுரம் விளையாட்டு மைதானத்தில்

அக்டோபர் 5, 6 சனி, ஞாயிறு கிழமைகளில்

தினசரி மாலை 4 மணி முதல் நடைபெறும்.

○

தலைவர்: உ. கணபதி எம். ஏ.

திறப்பாளர்: சின்னதுரை எம்.ஏ.(பி.எல்)

சிறப்புச் சொற்பொழிவுகள்:

5—10—63

இராஜாஜி,

காயிதெமில்லத் இஸ்மாயில்

6—10—63

அறிஞர் அண்ணா

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர்

எஸ். டி. சோமசுந்தரம், அவர்களும்

மாணவத் தோழர்கள் பலரும் பங்கேற்பர்.

அனைவரும் வாரீர்! ஆதரவு தாரீர்!!

○

எப். எஸ். வெங்கடாசலம் எம்.ஏ.பி.எல்.

வரவேற்புக் குழுத் தலைவர் தி. மா. மு. க.

தலையங்கம் தொடர்ச்சி… … …

என்பதே நமது ஆவல். தமிழகத்திலிருந்த அமைச்சரவைகள் திடீரெனக் கவிழ்ந்தபோது, அதற்குக் காரணமாக இருந்த காரணமெல்லாம், கழகத்துடன் அரசாங்கம் மோதிக்கொண்டதுதான் என்பதை எல்லா அமைச்சரவையிலும் இருந்து அனுபவப்பட்ட பக்தவத்சலம் உணராமலிரார். கழகத்துடன்—கழகக் கொள்கைகளுடன் மோதிக்கொள்வது இந்த நாட்டுச் சமுதாயத்திடமே போர்ப்பிரகடனம் செய்துவிட்டதாக அமையும். ஆயிரக்கணக்கான ஆண்டுகால பண்பாட்டுடன் விளையாடிப்பார்க்கும் சிறுபிள்ளை விளையாட்டாக முடியும். எதிர்பாராதவர்களையெல்லாம் நினைக்க முடியாத உச்சாணிக் கொம்புக்கு ஏற்றிக்கொண்டு வருவது கழகக் கொள்கைகள்தாம்.

அந்தக் கொள்கைகளைக் காக்க முடியாவிட்டாலும் அழிக்க நினைக்காமலிருப்பதுதான் புதிய முதலமைச்சர் நீண்டகாலம் பொறுப்பில் இருந்து பணியாற்றுவதற்குள்ள வழி என்பதைத் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் அவருக்குத் தெரிவித்துக்கொள்வது நமது உரிமை.

தமிழர்களின் விருப்பத்திற்கு தலையசைக்கிருரா அல்லது ''இந்து'' போன்ற இதழ்களின் போதனைக்குச் செவிமடுக்கிருரா என்பதைப் பொறுத்துத்தான், புதிய முதலமைச்சரின் புகழும் ஓங்கும்—நிலைக்கும்.

கனம். பக்தவத்சலம் ''பச்சைத் தமிழரா'' அல்லவா என்று உறைகல்லில் உறைத்துப் பார்க்கக் கழகம் தற்போது விரும்பவில்லை. ஆனல், தமிழினத்துப் பண்பாட்டின் ஆழத்தை உணரமுடியாதவராக, மக்களாட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளில் அவ்வளவாக புலமையில்லாதவராக, ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளுக்குள்ள சிறப்பையும் உரிமையையும் தெரிந்துகொள்ள முடியாதவராக, ஆட்கள் பலத்தைக் கொண்டே அரசியலை நடத்திவிடலாம் என்று தவருகக் கணக்குப்போட்டு இத்தனை நாளும் இந்த மாநில முதலமைச்சராக இருந்தவர் மாறி, இந்தக் குறைபாடுகள் ஓரளவுக்குக் குறைந்து காணப்படுபவரும், எடுத்துச் சொன்னல் புரிந்துகொள்ளக்கூடியவருமான திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக வந்துற்றிருப்பது மகிழ்ச்சி கொள்ளக் கூடியதே ஆகும், என்று தமிழக மக்கள் நம்பியுள்ளனர். அந்த நம்பிக்கைக்கு உரியவராக திரு. பக்தவத்சலமும் அவரது அமைச்சரவையும் செயல்படும் என்று நாமும் எதிர்பார்த்து அவரை வரவேற்கிருேம்.

○

திராவிடன்

இந்தி எதிர்ப்பு சிறப்பு இதழ்

——(0)——

சென்னையில் நடைபெறும் இந்தி எதிர்ப்பு சிறப்பு மாநாட்டினையொட்டி, திராவிடன் இந்தி எதிர்ப்பு சிறப்பிதழ் சிறந்த முறையில் தயாராகிறது!

ஃ அரிய வரலாற்றுக் கட்டுரைகள்!

ஃ முன்னணி வீரர்களின் எழுத்தோவியங்கள்!

ஃ 38-ம் ஆண்டு முதல் இந்திக்குத் தென்னகம் காட்டி வந்த எதிர்ப்பு விவரங்கள்!

ஃ இதுவரை நடைபெற்ற மண்டல மாநாட்டுச் சிறப்புகள்!

ஃ திருச்சி மாணவர் மாநாட்டு நிகழ்ச்சிகள்

ஆகிய சிறப்புகளுடன்

அழகிய முகப்பும்—அதிக பக்கங்களும் கொண்டு
12—10—63 அன்று வெளிவரும்.

விலை: 50 காசு.

விவரங்களுக்கு :—

'திராவிடன்' 16. இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1.

இனியும் பொறுப்பது இலை!

——○——

அன்னை மொழியைக் காத்திடுவோம்;
அதற்கே உயிரைத் தந்திடுவோம்!
என்னை நம்மொழி தரவில்லை;
ஏனிங் கிந்தி வருந்தொல்லை!
பழமைப் பெருமை நமக்குண்டு;
பகரின் நம்மொழி கற்கண்டு!
வழங்கும் செந்தமிழ் பலஇயலும்;
வல்லோர் முயன்குல அஃதியலும்!
உயர்தனிச் செம்மை உடையதிது;
உலகில் இதற்கு இணையேது!
கயல்வில் புலிக்கொடி முடிமன்னர்;
காத்தே வளர்த்தார் வெகுமுன்னர்!
இன்றம் மொழியை அழித்திடவே;
இந்தியை இங்கு நுழைத்திடவே!
முன்னம் போன்றே இந்நாளும்;
முயலுருர் புடைக்குது நந்தோளும்!
இனியும் பொறுப்பது இலைஎழுவோம்;
இசையார் நெறியில் போரிடுவோம்!

-வேல்வேந்தன்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

——(ஃ)——

வணக்கம். செப்டம்பர் மாதம் முடிய உள்ள பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவருது அனுப்பிவைக்க வேண்டுகிரேம்.

பச்சையப்பன் கல்லூரி தி. மா. மு. க.

○

பச்சையப்பன் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 13—9—63 வெள்ளி மாலை 6 மணியளவில், தா. ந. டில்லிபாபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமையம் நிகழ்ந்த நிர்வாகிகள் தேர்தலில், தா. ந. டில்லிபாபு அவர்கள் செயலாளராகவும், திரு. தனசேகரன் அவர்கள் துணைச்செயலாளராகவும், திரு. இராதா கோவிந்தன் அவர்கள் பொருளாளராகவும் தேர்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில், மத்திய அரசின் இந்தி திணிப்பை வன்மையாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னைக் கல்லூரிகள் தமிழ் மன்றத் தலைவராக திரு. துரை முருகனும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்ற செயலாளராக திரு. திருமால் அவர்களும், பச்சையப்பன் கல்லூரி விடுதி பொதுச்செயலாளராக திரு. நடராசன் ஆகிய தி. மா. மு. க. உறுப்பினர்கள் வெற்றி பெற்றதை பாராட்டும் வகையிலும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிடன் சந்தா விவரம்

ஓராண்டு	…	ரூ. 8.
ஆறு மாதம்	…	ரூ. 4.
தனிப்பிரதி	…	16 காசு.

நிர்வாகி: திராவிடன், சென்னை 1

நெல்லை மாநாட்டில்

தலைவர் ஏ. கோவிந்தசாமி முழக்கம்!
திறப்பாளர் ப. உ. சண்முகம் சொற்போர்!



ஏ. கோவிந்தசாமி

சைவக் கோட்டமான நெல்லையில், காலையில் ஊர்வலம் நடைபெற்றபோது, ஒரு சைவப் பெரியவர் ஓடோடி வந்து 'இந்தி எதிர்ப்பு மாநாட்டைச் சிறப்பாக நடத்துங்கள்' என்று கூறி, 'அறிஞர் அண்ணா வாழ்க' என்று கூறினார்.

கழகத்தைச் சேராதவரும் சைவப் பெரியாருமான அவரைப் போன்றோரும், இந்தியை எதிர்க்கும் கட்சி சார்பற்ற பல பெரியவர்களும், இந்தியை எதிர்த்துத் தமிழைக் காக்கத் எண்ணங்கொண்டு, கழகத்தின் போராட்டத்திற்கு ஆதரவு தருகிறார்கள்.

இந்த மாநாடு நடைபெறுகின்ற வட்டத்தில்தான் முஸ்லிம் லீக் தலைவர் காயிதேமில்மத் பிறந்தார் என்று கேள்விப்பட்டுப் பெருமையும்-மகிழ்ச்சியும் அடைகிறோம்.

நெல்லை மாவட்டம் வ. உ. சிதம்பரனார் பிறந்த மாவட்டம், அவர் சிறந்த தியாகி—விடுதலைக் கரகச் செக்கிழுத்தவர்! நாம் மாற்றுக்கட்சிக்காரராக இருந்தாலும், அவரது சேவையை நினைத்துப் பெருமைப்படுகிறோம்.

இதே மாவட்டத்தில்தான் பாரதியாரும் பிறந்தார்; நாடு விடுதலைப் பெறுவதற்குரிய கவிதைகளை எழுதிப் போராடினார்.

பாண்டிய மண்டல முத்து கே. வி. கே. சாமி—இந்த மாநிலத்திலே பிறந்து அரசியலுக்குப் பலியானவர்!

அவரைப் போன்று கழக வளர்ச்சிக்காக உயிர் துறந்த பாண்டி மண்டல மாவட்டங்களைச் சார்ந்த கழகத் தியாகிகளுக்கு எனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்பு மூன்றாவது மாநாட்டுக்கு என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டதைப் போலவே அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் போராட்டத்தில் ஈடுபடவும் என்னை அனுமதிக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புட் போராட்டத்தில் உயிர் துறக்க வேண்டிய நிலை வந்தாலும் அதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

நானும், அண்ணா அவர்களும் தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த காலத்தில், அப்போது நடைபெற்ற அவைக் கூட்டமொன்றில், சர்தார் வேதரத்தினம் என்ற காங்கிரசுக்காரர் '1938-லேயே நாம் இந்தியை ஆட்சிமொழியாக ஏற்படுத்தியிருக்கவேண்டும்; அதைத் தவற விட்டுவிட்டோம். இப்போதாகிலும் உடனடியாக அதை நிறைவேற்ற வேண்டும்' என்று கூறினார்; உடனே காமராசர், அறிஞர் அண்ணா அவர்களைச் சுட்டிக்காட்டி, 'அவரும் இந்தியை ஏற்றுக்கொள்ளவில்லை; நானும் இந்தியை ஏற்றுக்கொள்ளவில்லை; நீர் ஒருவர் கூறுவதற்காக இந்தியை நாங்கள் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா?' என்று ஆவேசமாகக் கூறினார்.

அதே காமராசர்தான், இன்று இந்தியை எதிர்த்து நாம் நடத்தப் போகும் போராட்டத்தைப் பற்றி, 'போராட்டமா? நடத்தட்டும் பார்க்கலாம்' என்று கூறுகிறார்.

அவர் பதவியிலிருப்பதால்—ஆட்சிப் பொறுப்பு அவருடைய மேற்பார்வையிலிருப்பதால், நம்மைப் பார்த்து துப்பாக்கியை நீட்டுவார்—சட்டத்தை காட்டுவார்—நம் உயிர்களைக் குடிப்பார்; இதனைக் கண்டு கழகத் தோழர்கள் அஞ்சப் போவதில்லை—கோழையாகிவிடப் போவதில்லை!

ஃ

ப. உ. சண்முகம்

பாண்டிய மண்டலத்திலே நடைபெறும் இந்த இந்தி எதிர்ப்பு மாநாடு வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இந்தியை எதிர்த்து மாநாடு நடத்தும் நமக்கு, இந்தி மீதுள்ள வெறுப்பாலல்ல; இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கி மக்கள்மீது கட்டாயமாகத் திணிப்பதால்தான் நாம் இப்படி மாநாடுகள் மூலமாகவும்—பொதுக்கூட்டங்கள் மூலமாகவும் எதிர்க்கிறோம். இந்தியை நாம் எதிர்க்கிறோமென்றால், ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்குவதற்காக அல்ல. இந்தியை ஆட்சி மொழியாக்குவதைத்தான் கழகம் எதிர்க்கிறது. இதை மாற்றுக் கட்சித் தோழர்கள் உணர வேண்டும்.



இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தட்டும் பார்க்கிறேன் ஒரு கை. என்ற கருத்தில் காமராசர் பேசுகிறார். வேறு சிலர் கேலி பேசுகின்றனர்—இந்தியை எதிர்க்க லாயக்கற்றவர்கள் நையாண்டி செய்கிறார்கள்.

இந்தியினால் விளையும் கேடுகளை உணர்ந்துதான் தி. மு. கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவங்குகிறது.

காமராசரிடம் இருக்கும் துப்பாக்கி ஆணவத்தால் நம்மைப் பார்த்து "பார்க்கிறேன் ஒருகை" என்கிறார், தடியிருக்கிறது என்ற தைரியத்தால் — சிறைகளின் கோரச் கொடுமைகளை அனுபவிக்கச் செய்கிறேன் என்ற அகம்பாவத்தால் அவர் அப்படிக் கூறுகிறார்.

ஆட்சியாளரிடமுள்ள துப்பாக்கியை—சிறையை—தடியை நாம் அறியாதவர்களல்ல; அறிவோம்.

கழகம் நடத்திய விலைவாசிப் போராட்டத்தில், அறிஞர் அண்ணாவை வேலூர் சிறையிலே போட்டுப் பூட்டினார்கள். அதையும் அறிவோம். சிறைகளைக் காட்டி எங்களைப் பயங்கரம் காட்டாதீர்கள். சிறையிலே தந்த தொல்லைகளை நாங்கள் அனுபவித்தவர்கள்தான்.

ஆட்சியிலே அமைச்சர்களாக வீற்றிருக்கும் காமராசரும், பக்தவத்சலமும் இதே சிறையில்தான் இருந்தார்கள். அவர்களையும்தான் எங்களுடைய கைகளால் போட்டுப் பூட்டினோம் என்று சிறையதிகாரிகள், அவர்களைப் பற்றி எங்களிடம் கூறினார்கள். நேற்று சிறையிலே போட்டுப் பூட்டப்பட்டவர்கள்தான், இன்று நம்மைப்பார்த்து "சிறை இருக்கிறது பார்க்கிறேன் ஒருகை" என்ற பாணியில் பேசுகிறார்கள்.

சிறையிலே இருந்தவர்கள்தான் இன்று அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்றால், நீங்களெல்லாம் ஒரு நாளைக்கு ஏன் அமைச்சராக மாட்டீர்கள்? என்று சிறை நமக்குக் கூறிக்கொண்டிருக்கிறது.

காமராசரிடம் தடி இருக்கிறதென்றால், அது வெள்ளையன் விட்டுவிட்டுப் போன தடிதான். இவர்கள் ஆட்சியில் வேண்டுமானால் அந்த தடிக்குப் பித்தளை பூண் கட்டியிருக்கிறார்கள் என்று ஆணவப்படலாம் அவ்வளவுதான்.

துப்பாக்கி இருக்கிறது என்று கூறுவார்களேயானால், உங்கள் துப்பாக்கியிலே எங்களைச்சுட போதுமான குண்டுகள் இருக்கின்றனவா? இருந்தால் சுடுங்கள்—குறி தவறாமல் சுடமுடியுமா? குறி தவறாமல் சுடுவோம் நாங்கள் என்று கூறுவீர்களேயானால், அந்தத் துப்பாக்கியை சீனாக்காரன் மீது நீட்டுங்கள். எங்களைத்தான் சுட துப்பாக்கிகளைப் பயன்படுத்துவோமென்றால் அதை நாங்கள் சவாலாக ஏற்கத் தயாராக இருக்கிறோம்.

சிறையிலே எங்களைத் தள்ளலாம்—நாங்கள் மீண்டும் எப்போது திரும்புவோம்-அது தெரியாது-சிறையிலே உனது கொடுங் கோரத்திற்குப் பலியான கோ. சு. மணி-பொற்செழியன்களைப்போல, எங்களிலே பலர் ஆக்கப்படலாம் அதையும் உணர்ந்திருக்கிறோம்.

இந்தியால் தமிழ் கெடாது என்கிறார்கள். சாவுமொழி இந்தியால் தமிழ் கெடுகிறதோ—இல்லையோ இந்தி ஆட்சி மொழியாவதை நாங்கள் எதிர்த்தே தீருவோம்.

இந்த நாட்டில் இந்தி புகுத்தப்படுவது கொடுமை—அதை மக்கள் நல்லவகையிலே உணர்ந்துவிட்டால்தான் இந்த மாநாட்டிலே காணப்படும் எழுச்சியும்—உணர்ச்சியும் பொங்கிவழிகிறது.

இந்தியினால் விளையவிருக்கும் கேடுபாடுகளைப் புலவர்களும்—பொதுமக்களும் புள்ளி விவரங்களோடு கூறுவதை, மக்கள் ஆதரிக்கிறார்கள். அதன் எதிரொலியே நமது போராட்டமாகும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறை செல்லவும் — எவ்விதத் தியாகத்தையும் ஏற்கவும் முன்வரவேண்டும். இந்த போராட்டத்தில் நாம் நிச்சயமாக வெற்றியடைவோம் என்று கூறி இந்த மாநாட்டைத் துவக்கி வைக்கிறேன்.

—22—9—63 அன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாடு!

○

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1